முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்.

**EA.145/2023 in EP No.84/2009 in OS.182/1992**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 17.12.2024 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L., (Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| தேதி | 17.12.2024 | சாட்சி | ம.சா.1 |
|---|---|---|---|
| பெயர் | சம்பத் | வயது.. | 47 |
| தந்தை பெயர்.. | ராமலிங்கம் | கிராமம்.. | பி.முட்லூர் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை ..**

1. நான் நிரந்தரமாக வசித்து வருவது பி.முட்லூர் கிராமம் என்றால் சரிதான். ஜீவரத்தினம் உடையார் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால் நன்றாக தெரியும். அவருடைய மனைவி தான் ராஜேஷ்வரி என்றாலும், மகன்கள் சரவணன், சண்முகம், சங்கர் என்றாலும் சரிதான். ஜீவரத்தினம் உடையாரின் சகோதரிகள் தேவகி, சுசீலா, ஞானசௌந்தரி என்றால் சரிதான். ஜீவரத்தினம் உடையாரின் மனைவி ராஜேஷ்வரி உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை, இறந்து விட்டார். சுசீலா, ஞானசௌந்தரி ஆகியோர் ஜீவரத்தினம் உடையாரின் மகன்களுக்கு எதிராகவும், தேவகிக்கு எதிராகவும் அசல் வழக்கு எண்.182/1992 சிதம்பரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். சரவணன்,சங்கர் ஆகியோர் மைனர்களாக இருக்கும்போது வழக்கு தொடரப்பட்டது என்றால் சரிதான்.

2. நான் கிரயம் வாங்கிய சொத்து அந்த அசல் வழக்கு எண்.182/1992 வழக்கில் கட்டுப்பட்ட சொத்து என்பது தெரியுமா என்றால் வழக்க தாக்கல் செய்வதற்கு முன்பாகவே நான் ராஜேஷ்வரியிடம் கிரயத்திற்காக முன்பணம் கொடுத்திருந்தேன். 2ம் மனுதாரர் ஜோதிலிங்கத்தின் சொத்தும் அந்த வழக்கில் கட்டுப்பட்ட சொத்து என்றால் சரிதான். எந்த எந்த வருடம் தேதி மாதத்தில் ராஜேஷ்வரியிடம் கிரயம் வாங்கிக் கொள்வதாக ஒப்புக்கொண்டேன் என்றால் ஞாபகம் இல்லை. இன்றைய தேதியில் இருந்து எத்தனை வருடத்திற்கு முன்பு கிரய ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றால் 35 வருடத்திற்கு முன்பு வாய்மொழி ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த வாய்மொழி ஒப்பந்தம் செய்யப்பட்டதில் இருந்து

மனு சொத்தினை நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். 35 வருடங்களாக நான் சொத்தை அனுபவித்து வருகிறேன் என்பதை காண்பிப்பதற்கான ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது, அங்கு நான் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன்.

3. நீதிமன்ற ஆணையர் வழக்கறிஞர் பி.ராஜமாணிக்கம் வழக்கு சொத்தை பார்வையிட்டாரா என்றால் பார்வையிட்டார், வழக்கு சொத்தில் வீடு இருக்கும்போது நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டார். நீதிமன்ற ஆணையரிடம் நான் மற்றும் ஜோதிலிங்கம் கிரயம் வாங்கிய பத்திரத்தை காட்டினோமா என்றால் காண்பித்தோம். கடந்த 2009 வருட கிரய பத்திரத்தில் வாய்மொழி கிரய ஒப்பந்தம் குறித்த விவரங்கள் எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்படவில்லை. நீதிமன்ற ஆணையர் வழக்கறிஞர் பி.ராஜமாணிக்கம் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளது குறித்து தெரியுமா என்றால் தெரிந்துகொள்ளவில்லை. இந்நீதிமன்றத்தில் 21.09.1998 தேதியிட்ட முதல்நிலை தீர்ப்பாணை மற்றும் 2002 யில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கபட்ட நிலையில் அதன் விவரம் தெரியுமா என்றால் தெரியும் ஆனால் அது Exparte தீர்ப்பாணை.

4. Exparte தீர்ப்பாணை குறித்து எந்த வருடம் எனக்கு தெரியும் என்றால் சுமார் 20 வருடத்திற்கு முன்பு நான் வீடு கட்டிக்கொண்டிருந்தபோது தெரியும். நான் கிரயம் வாங்கிய சொத்து ராஜேஷ்வரிக்கு எவ்வாறு பாத்தியம் என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் ஜீவரத்தினம் உடையார் உயில் எழுதி அவருடைய மகன்களிடம் இருந்து நான் கிரயம் வாங்கினேன். என்னுடைய கிரய ஆவணத்தில் அந்த உயில் பற்றி எழுதியுள்ளதா என்றால் சரியாக பார்க்கவில்லை. எந்த வருடம் அந்த உயில் எழுதப்பட்டது என்றால் தெரியாது. உயிலை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தேவகிக்கு நீதிமன்றம் மூலம் சொத்துக்கள் ஒதுக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தேவகிக்கு நீதிமன்றம் மூலம் ஒதுக்கப்பட்ட சொத்தில் நான் கிரயம் பெற்ற சொத்து கட்டுப்பட்டு இருக்கிறதா என்றால் அதுபற்றி தெரியாது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 ஆவணத்தில் "எனக்கு பூர்வீக பாத்தியமாக தொடர்ந்து எனது அனுபவ சுவாதீனத்தில் இருந்து வரும் சொத்தை" என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. உயில் சம்மந்தமான எந்த ஒரு வாசகமும் ம.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கிய சொத்தானது தேவகி மற்றும் ஞானசௌந்தரிக்கு முதல்நிலை, இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு வாங்கினேன் என்றால் சரிதான். அரசாங்கத்தால் 1/2 செண்ட் கொடுக்கப்பட்டது என்பதனை நம்பி நான் கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான். அந்த 1/2 செண்ட் சண்முகம், சரவணன், சண்முகேஷ்வரி ஆகியோரிடம் இருந்து அரசாங்கம் சாலைக்காக கைப்பற்றியது என்றால் சரிதான். ராஜேஷ்வரிக்கு தனியாக பாகபிரிவினை வழக்கில்

சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும், அந்த சொத்தை தான் ராஜேஷ்வரி வகையறா கிரயம் கொடுக்கமுடியும் என்றாலும் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிடும் போது நான் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் எவ்வளவு தொகைக்கு கிரயம் பெற்றேன் என்றால் நானும், ஜோதிலிங்கமும் இரண்டு சொத்தையும் சேர்த்து ரூ.8,00,000/- ற்கு கிரயம் வாங்கினேன். கிரய தொகை எனக்கு எப்படி கிடைத்தது என்றால் என் தம்பி ஜோதிலிங்கம் வெளிநாட்டில் சம்பாதித்து பணம் அனுப்பினார். சிங்கப்பூரில் இருந்து வந்த ஒரு நபரிடம் பணம் கொடுத்து அனுப்பினார், ரூ.3,00,000/- என் தம்பி கொடுத்து அனுப்பிய பணம் மீதி ரூ.5,00,000/- ஆணையான்குப்பத்தில் உள்ள என்னுடைய நிலத்தை விற்று பெற்ற பணம்.

**சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

*Sd/-S.Suganiya Sri*,
Principal District Munsif
Chidambaram.